**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 215/2018 P.W.10/L.W.10**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. சாமுவேல் (உதவி ஆய்வாளர்) ஓய்வு | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 17.03.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்பொழுது காவல்துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். இதற்கு முன்பு நான் மண்டைக்காடு காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது 02.11.2016ம் தேதி 18.00 மணிக்கு நிலையப் பொறுப்பில் இருக்கும் போது குளச்சல் அரசு மருத்துவமனையிலிருந்து போண் மூலம் கிடைக்கப்பெற்ற இன்றிமேசன் படி அரசு மருத்துவமனை சென்று இன்றிமேசனை பெற்றும் பின்னர் சிகிட்சையில் இருந்த அழகன்பாறை அஞ்சல், கோவிலான்விளையைச் சேர்ந்த ராஜைய்யன் என்பவர் மகன் ராஜரெத்தினமணி என்பவரை பார்த்து விசாரித்து அவர் ஆஜர் செய்த புகார் மனுவைப் பெற்று 19.00 மணிக்கு நிலையம் வந்து காவல்நிலையக்குற்ற எண். 190/2014 சட்டப்பிரிவுகள் 452, 294(பி), 323, 506 பத்தி இரண்டு இ.த.ச 1860ன் கீழ் வழக்குப்பதிவு செய்தேன். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அசாஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார் மனுவை கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், நகல்களை சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும் ஒரு நகலை விசாரணைக்காக உதவி ஆய்வாளரின் பார்வைக்கும் வைத்தேன். இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரணைச் செய்தார்.

**குறுக்கு விசாரணை** :

நான் மருத்துவமனை செல்லும்போது காயம் பட்ட நபர் மனு எழுதி வைத்திருந்தார் என்றால் சரிதான். அதை யார் எழுதிக்கொடுத்தார்கள் என்று நான் கேட்கவில்லை என்றால் சரிதான். வழக்கின் புகார்தாரர் கொடுத்த உண்மைக்கு மாறான தகவலின் அடிப்படையில் நான் முதல் தகவல் அறிக்கையாது பதிவுச் செய்தேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை – முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.